# ஏழாலைக் கிராமத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் தமிழ்ப் பெரியார்களின் பங்களிப்பு ஓர் பதிவு


பெயர் :- கன்சிகா சிறிவந்தராசா

பதிவிலக்கம் :- **EU/IS/2018/AC/531**

சுட்டிலக்கம் :- **CS 8931**



LIBRARY
14 MAY 2025
EASTERN UNIVERSITY, SRI LANKA

FAC1564

Project Report
Main Library, Eastern University, Sri Lanka


இவ்வாய்வு கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணி சிறப்புக் கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அலகாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரப் பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.


வரலாற்றுத் துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை


2024

# ஆய்வு சுருக்கம்

ஒரு கிராமத்தின் பண்பாடானது அதன் சமூக வளர்ச்சி மற்றும் கலாச்சார பொருளாதார அரசியல் நிலை என்பவற்றின் மூலம் தீர்மானிக்கப்படும். இவ்வாறு ஒரு கிராமத்தின் வரலாற்று வளர்ச்சியானது அங்கு வாழ்ந்து மறைந்த பெரியார்களின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாக காணப்படும். ஏழாலைக் கிராமமானது இற்றைக்கு பல நூறு ஆண்டுகள் பழமையான ஒரு கிராமமாக காணப்படுகின்றது. இவ்வாறு கிராமத்தின் உடைய பழம்பெருமையை நிலை நாட்டி நிற்பதில் இக்கிராமத்தில் வாழ்ந்த பெரியார்களின் வரலாறு முக்கியம் பெறுகின்றது. “ஏழாலைக் கிராமத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் தமிழ் பெரியார்கள் ஓர் பதிவு” எனும் ஆய்வானது ஏழாலை பிரதேசத்தினை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவை மேற்கொள்ளப்பட்டதனுடைய நோக்கம் ஏழாலைக் கிராமத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் பங்காற்றிய பெரியார்கள் பற்றி அறிந்து கொள்ளுதல் மற்றும் அவர்கள் பற்றிய மறைக்கப்பட்ட அல்லது முன்னுக்கு பின் முரணான கருத்துக்களை பற்றி தெளிவாக ஆராய்வதையும் அதற்குரிய தீர்வாகவும் இவ்வாய்வு அமைகின்றது. ஏழாலைக் கிராமமும் அதன் வரலாற்று வளர்ச்சியில் பங்கெடுத்த பெரியார்களின் வரலாறு எவ்வாறு அமைந்துள்ளது?, அவர்களுடைய பணிகள் எவ்வாறு ஏழாலைக் கிராமத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் பங்களிப்பு செய்தது?, இவர்களுடைய ஏனைய கல்வி சமய சமூகப் பணிகள் எவ்வாறு அமைந்திருந்தது? போன்ற ஆய்வு வினாக்கள் முன்வைக்கப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வானது ஒரு மேசை ஆய்வாக காணப்படுகின்றது. இதற்காக முதலாம் நிலைத்தரவு, இரண்டாம் நிலை தரவு என்பன பிரயோகிக்கப்பட்டுள்ளது. முதலாம் நிலை தரவுகளாக இவர்களது சமகாலத்தில் வாழ்ந்த பெரியார்களிடமிருந்து நேர்காணல் மூலம் தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டது. இரண்டாம் நிலைத் இவர்களைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், கட்டுரைகள் என்பதன் மூலம் தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டது. இங்கு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை வைத்து கிராமத்தில் வாழ்ந்த பெரியார்களின் உடைய வரலாறுகளையும் அவர்களுடைய பணிகளையும் பற்றி தெளிவான விளக்கத்தினை பெற முடிந்ததோடு அவர்கள் இக்கிராமத்திற்கு ஆற்றிய பணிகள் பற்றிய முடிவுகளையும் எடுக்கக் கூடியதாக இருந்தது. இவ்வகையில் கிராமத்தின் சமய சமூக பொருளாதார வளர்ச்சியில் வாழ்ந்து மறைந்த பெரியார்களுடைய பங்களிப்புக்கள் இன்றுவரையும் கிராமத்தின் உடைய வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

# பொருளடக்கம்


விடயம் பக்கங்கள்

முன்னுரை..........I

நன்றியுரை..........II

ஆய்வுச் சுருக்கம்..........III

ஆய்வு அறிமுகம்..........1-7

ஏழாலைக் கிராமமும் இங்கு வாழ்ந்த பெரியார்களின் வரலாறும்..........8-42

ஏழாலைக் கிராமத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் பெரியார்கள்..........43-54

பெரியார்களால் ஆற்றப்பட்ட ஏனைய பணிகள்..........55-78

முடிவுரை..........79-81

உசாத்துணைகள்..........82-84

பின்னிணைப்புக்கள்..........V-VI